தினமணி

12.05.2024

# சமூக ஆர்வலர் ராயனை தாக்கியவர்களை கைது செய்ய மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு வலியுறுத்தல்

திருநெல்வேலி, மே 11: சமூக ஆர்வலர் பெர்டின் ராயனை தாக்கியவர்களை காவல் துறை உடனடியாக கைது செய்ய வேண்டும் என மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.



ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துவிட்டு வந்த மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பினர்.

சமூக ஆர்வலர் பெர்டின் ராயனை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மாநகர காவல் ஆணையர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பின் சார்பில் சனிக்கிழமை மனு அளிக்கப்பட்டது. இது தொடர்பாக மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பின் தேசிய செயலர் ஹென்றி திபேன் கூறியதாவது:

திருநெல்வேலியைச் சேர்ந்த மனித உரிமை காப்பாளர் பெர்டின் ராயன் மீது கொலை முயற்சி தாக்குதல் நடைபெற்றுள்ளது. அவர் தாக்கப்பட்டு ஒரு வாரத்துக்கு மேலாகியும் இதுவரை குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பாக மாநகர காவல் ஆணையரை சந்தித்து, தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளோம்.

சமூக ஆர்வலரான பெர்டின் ராயனுக்கு பாதுகாப்பு அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டபோதிலும், பாளையங்கோட்டை போலீஸார் உரிய பாதுகாப்பு அளிக்க தவறிவிட்டனர். பெர்டின் ராயன் காரில், ஏர்கன் துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாகவும், அது தொடர்பாக விளக்கம் அளிக்குமாறும் போலீஸார் சம்மன் அனுப்பி உள்ளனர். ஒருவர் கொலை வெறி தாக்குதலுக்கு உள்ளாகி உயிருக்கு போராடி வரும் நிலையில், அவரை தாக்கியவர்களை கைது செய்யாமல், பாதிக்கப்பட்டவருக்கு அழைப்பாணை அனுப்பியது எந்த விதத்தில் நியாயம்? போலீஸார் குற்றவாளிகளை கைது செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் சின்னதுரை ஜாதிய தாக்குதலுக்கு உள்ளானார். அவருக்கு தமிழக அரசு சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்ததுடன், கல்வி தடைபடாமல் இருக்க பல்வேறு உதவிகள் செய்தது. தற்போது அந்த மாணவர் பிளஸ்-2 பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்றிருக்கிறார். அவருக்கு பாராட்டுகள்.

அவருக்கு தாழ்த்தப்பட்டோருக்கான சட்டப்படி அரசு ரூ.1.93 லட்சம் வழங்கியது. மேலும் அவருக்கு பாளையங்கோட்டை ரெட்டியார்பட்டி பகுதியில் அரசு சார்பில் வீடு வழங்கப்பட்டது. அந்த வீட்டை மறுவாழ்வு திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கி இருக்க வேண்டும். அப்படி செய்யாமல் மாணவரிடம் இருந்து ரூ.1,17,300 பெற்று உள்ளனர். மேலும் மாதாந்திர பராமரிப்பு தொகையும் வசூலிக்கப்படுகிறது. எனவே தமிழக முதல்வர், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆகியோர் இதில் கவனம் செலுத்தி வீட்டுக்கு வசூலித்த தொகையை திரும்ப வழங்க வேண்டும் என்றார்.

அப்போது, வான்முகில் பிரிட்டோ, லேனாகுமார் யாதுமாகி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் ஸ்ரீராம், இந்திய கம்யூனிஸ்ட் ரெங்கன், பேராசிரியர் பாத்திமா பாபு, மீனவர் கூட்டமைப்பு சகாய இனிதா, தமிழ்ப்புலிகள் மாடத்தி, எஸ்டிபிஐ கட்சி சாகுல் ஹமீது உஸ்மானி உள்பட பலர் உடனிருந்தனர்.